Registered as a news paper.

பக்கங்கள்: எட்டு

விலை ரூபா [illegible]0.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 வைகாசி 06 ஹிஜ்ரி 1427 ற.ஆகிர் 21 (20.05.2006) சனிக்கிழமை இதழ் 232

யாழ்.நகரில் தனித்துவமான கலைநயம் மிக்க துல்லியமான அச்சுவேலைகளுக்கு

SP சிறந்த இடம்

சுரபி பதிப்பகம்

267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

# புலிகளை தடைசெய்வதற்கு உடனடிச் சாத்தியம் இல்லை!

## ஐரோப்பிய ஆணைக்குழு பேச்சாளர் தெரிவிப்பு

பிரஸெல்ஸ் —

விடுதலைப்புலிகள் மீது ஐரோப்பிய யூனியன் உடனடியாகத் தடைவிதிப்பதற்கான சாத்தியம் எதுவும் இல்லை என ஐரோப்பிய யூனியன் ஊடகப் பிரிவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் நேற்றிரவு தகவல் வெளியிட்டுள்ளார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஐரோப்பிய யூனியன் தடைசெய்யப்போவதாக ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தன. சிங்களப் பத்திரிகைகள் சில நேற்றைய தினமே இந்தத் தடை விதிக்கப்பட்டுவிட்டதாக செய்தி வெளியிட்டிருந்தன.

ஆனால், இன்று ஆரம்பமாகும் ஐரோப்பிய ஆணைக்குழுக் கூட்டத்தில் இலங்கை விவகாரம் தொடர்பாக எந்த விடயமும் ஆராயப்படுவதற்கான நிகழ்ச்சி நிரல் இல்லையென்று ஐரோப்பிய ஆணைக்குழுவின் ஊடகப் பிரிவு அதிகாரி தெரிவித்தார்.

ஆணைக்குழுவின் அடுத்த கூட்டத்தில் இது தொடர்பாக முடிவெடுக்கப் (08 ஆம் பக்கம் பார்க்க)

## இரு சடலங்கள் மீட்பு!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - மஞ்சத்தொடுவாயில் கொலைசெய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படும் இருவரின் சடலங்களை பொலிஸார் மீட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றது. பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து மேற்படி இரண்டு சடலங்களையும் மீட்ட பொலிஸார் மட்டக்களப்பு வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். (08ஆம் பக்கம் பாரக்க)

## புலிகள் மீது தடைவிதித்ததாக வெளியான செய்திக்கு மறுப்பு!

### ஐரோப்பிய ஒன்றியம் அறிக்கை

கொழும்பு —

ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாதப் பட்டியலில் விடுதலைப் புலிகளின் பெயர் சேர்க்கப்பட்டுள்ளதாக சர்வதேச மற்றும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளமை தவறானது என இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதரகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

ஊடகங்களில் வெளியாகியது போல விடுதலைப் புலிகள் ஐரோப்பிய அங்கத்துவ நாடுகளின் பயங்கரவாதப்பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

தற்போதைய நிலையில் விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் பட்டியலில் உள்ளடக்குவதா என்பது குறித்து ஐரோப்பிய நாடுகள் பரிசீலித்து வருகின்றனவே அன்றி, இன்னமும் பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் எடுத்த (08ஆம் பக்கம் பாரக்க)

## புலிகளின் சொத்துக்களை முடக்க ஐரோப்பிய நாடாளுமன்றம் தீர்மானம்!

### அரசாங்கம் மீதும் கண்டனம்

கொழும்பு —

விடுதலைப்புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஐரோப்பிய ஆணைக்குழுவிடமும், அங்கத்துவ நாடாளுமன்றத்திடமும் வலியுறுத்தி ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

19 சரத்துக்களை கொண்டமைந்த ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றின் தீர்மானத்தில் 15 ஆவது சரத்து ஐரோப்பிய ஒன்றியத்தில் வசிக்கும் தமிழ் சமூகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் பலவந்தமாக வரி விதிப்பதை சகல வழிகளிலும் தடுத்து நிறுத்துமாறு அங்கத்துவ நாடுகளிடம் அழைப்பு விடுத்துள்ளது.

இதேபோன்று தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய வங்கிக் கணக்குகள், உடமைகள், நிறுவனங்கள், பொறுப்புக்கள் என்பவற்றை உறை நிலையில் வைக்குமாறு அங்கத்துவ நாடுகளிடமும், ஐரோப்பிய ஆணையக்குழுவிடமும் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தின் 16 ஆவது சரத்து அழைப்பு விடுத்துள்ளது.

அத்துடன், காலவரையின்றி தமிழீழ விடுதலைப் புலிகளை வரவேற்பதில்லை (08 ஆம் பக்கம் பாரக்க)

...ல் கண்காணிப்பு குறிக்க...

20 உள்ளூராட்சி

2 படையதிகாரிகள் பலி!

## கடல் கண்காணிப்பு குறித்த

# புதிய யோசனை முன்வைப்பு!

கொழும்பு —

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கடல் கண்காணிப்புத் தொடர்பானபுதிய நிபந்தனைகள் அரசிடமும் விடுதலைப் புலிகளிடமும் சமர்ப்பித்திருப்பதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் கருத்துத் தெரிவிக்கையில் -

அரசு - விடுதலைப் புலிகள் ஆகிய இருவருக்கும் கடல்கண்காணிப்புத் தொடர்பான புதிய நிபந்தனைகளை சமர்ப்பித்துள்ளோம். அவர்கள் இது குறித்து ஆராய்ந்து, பின்னர் இது தொடர்பான கருத்துக்களை தெரிவிப்பார்கள்.

பாதுகாப்பை கருத்தில் கொண்டு புதிய நிபந்தனைகள் தொடர்பாக தக

(08ஆம் பக்கம் பாரக்க)

# 20 உள்ளூராட்சி சபைகளுக்கு இன்று வாக்களிப்பு!

கொழும்பு —

இன்று 20 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் வாக்களிப்பு காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளது என தேர்தல் திணைக்களம் தெரிவித்தது.

இவற்றில் கொழும்பு உட்பட 4 மாநகர சபைகள், 3 நகரசபைகள், 13 பிரதேச சபைகள் அடங்கும்.

(08 ஆம் ட்க்கம் பாரக்க)

# 2 படையதிகாரிகள் பலி!



கொழும்பு —

வவுனியா - ஓமந்தைப் பகுதியில் நேற்றுக்காலை நடத்தப்பட்ட தாக்குதலில் இரண்டு இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.

ஓமந்தை - மருதமடு, அரியகிரிட்டகுளம் என்ற இடத்திலிருந்த முன்னரங்க காவல் நிலைமீது நடத்தப்பட்ட தாக்குதலிலேயே இரு படையதிகாரிகளும் கொல்லப்பட்டனர்.

நேற்றுக்காலை 9 மணியளவில் இடம் பெற்ற இந்தத் தாக்குதலில் லெப்ரினன்ட் கொடித்துவக்கு, கோப்ரல் விஜேதுங்க ஆகியோரே பலியாகினர். லான்ஸ்கோப்ரல் ஒருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.

# கிளிநொச்சியில் பறக்கும் புலிகளின் விமானம்!

கொழும்பு —

விடுதலைப்புலிகளின் இலகு ரக விமானம் கடந்த சில நாட்களாக கிளிநொச்சி, முல்லைத்தீவு வான்பரப்பில் பறப்பில் ஈடுபட்டு வருவதாக விமானப்படை தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை இரணைமடு தளத்தில் இருந்து புறப்பட்ட விமானம் சுமார் அரை மணிநேரம் பறந்த பின்னர் தரையிறங்கியுள்ளது.

இரண்டு நாட்களுக்கு முன்னரும் இந்த விமானம் பயிற்சியில் ஈடுபட்டது. இதனை விமானப் படையின் ராடர்கள் பதிவு செய்துள்ளன.

(08 ஆம் பக்கம் பாரக்க)

# பணிப்புறக்கணிப்பு போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தம்!

யாழ்ப்பாணம் —

குடாநாட்டில் அரச ஊழியர்கள் கடைப்பிடித்து வந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை இன்று முதல் தற்காலிகமாக இடைநிறுத்துமாறு யாழ்.மாவட்ட தமிழ்த் தேசிய தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

யாழ். குடாநாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் - க.பொ.த உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு கல்விச் சமூகத்தாலும், பெற்றோர்களாலும் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைய, இன்று முதல் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படுகிறது.

22 ஆம் திகதி ஆரம்பமாகும் க.பொ.த உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன்கருதி இந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்படுகிறது.

எனினும், படையினரும், ஒட்டுக்குழுக்களும் இணைந்து நடத்தும் கொலை வெறியாட்டம் மோசமாகுமிடத்து இன்னும் இறுக்கமான போராட்டமாக இது வெடிக்கும் என்பதையும் தெரிவிக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போராளி ஒருவர் மட்டக்களப்பில் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு எல்லைப் பகுதியான பனிச்சங்கேணி - மாங்கேணியில் அரசியல்துறை போராளி ஒருவர் நேற்றுமுன்தினம் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் நீலன் (வயது 23) என்ற போராளியே வீரச்சாவடைந்ததாக மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் விடுமுறை யில் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தவேளை இவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தமிழர் மீதான படுகொலைகள் குறித்து விரைவான விசாரணை நடத்த வேண்டும்

## போருக்கு எதிரான அமைப்பு



கொழும்பு —

யாழ்.தீவகம் உட்பட தமிழர்கள் மீதான படுகொலைச் சம்பவங்கள் குறித்து விரைவான விசாரணை நடத்த இலங்கையிலுள்ள போருக்கு எதிரான அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பின் தலைவர் குமார் ரூபசிங்க வெளியிட்டுள்ள அறிக்கையில் -

நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை, திருமலை விக்னேஸ்வரன் படுகொலை, திருமலை 5 தமிழ் இளைஞர்கள் படுகொலை, கொழும்பில் 5 தமிழர்கள் தலை துண்டிப்பு, ஊர்காவற்துறை 13 தமிழர்கள் படுகொலை மற்றும் வவுனியா உட்பட்ட இடங்களில் நடந்த பல்வேறு படுகொலைகள் குறித்து அரசாங்கம் உரிய விசாரணைகளை நடத்த வேண்டும்.

இவை தொடர்பான விசாரணைகள் இதுவரை தொடங்கப்படவில்லை. இந்தப் படுகொலைகளுக்கான விசாரணை ஆணைக்குழு ஒன்றை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமிக்க வேண்டும்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள அனைத்துத் தரப்பினரும் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மதித்து நடக்கவேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகள் அனைத்து வகையான வன்முறைகளையும் கைவிட வேண்டும்.

சிங்களப் பேரினவாத அமைப்புக்களான - ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்றவை மகிந்த ராஜபக்ஷவை போருக்குத் தூண்டி வருகின்றன.

1971 மற்றும் 1988 - 89 ஆம் ஆண்டுகளைப் போன்று தனது அரசியல் லாபங்களுக்காக ஜே.வி.பியினர் நாட்டை போருக்குத் தூண்டுகின்றனர்.

ஜனாதிபதியும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரும் பேச்சுக்களை நடத்த வேண்டும். ஒரு சிறிய நாட்டுக்குள் இருக்கின்ற இரு தலைவர்களும் தொலைபேசியூடாக பேச்சுக்களை நடத்தலாம்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்வைக்க வேண்டும். முன்னைய அரச தலைவர் முயற்சித்தாலும், இது மிகவும் தாமதமானது. சிறுபான்மையினருடனான அதிகாரப் பகிர்வானது மிகவும் அவசியமானது. பெரும்பான்மை மக்கள் அதற்குத் தயாராகவே உள்ளனர்.

புதிய அரசியல் அமைப்பின் கீழ் வடக்கு - கிழக்குக்கு என்ன செய்ய இயலும் என்பதற்கான பணிகளை முன்னெடுக்க அரசியல் யாப்பு விவகார அமைச்சுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட வேண்டும்.

அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் ஜெனிவாப் பேச்சுக்களை மீண்டும் தொடங்க வேண்டும். ஜெனிவாவில் ஒப்புக்கொள்ளப்பட்ட விடயங்களை தமிழீழ விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் நிறைவேற்ற வேண்டும்.

ஜெனிவா ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதன் மூலமே இருதரப்பு நம்பிக்கையை கட்டியெழுப்ப முடியும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
## பல்கலைக்கழக அனுமதி கல்வியாண்டு - 2005/2006

2005 க.பொ.த (உ.த) பரீட்சையில் சித்தியடைந்து 2005/2006 கல்வியாண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மருத்துவம் / உயிரியல் விஞ்ஞானம் / விவசாயம் / முகாமைத்துவம் / வர்த்தகம் / சித்தமருத்துவம் / சித்திரமும் வடிவமைப்பும் / சட்டம் ஆகிய கற்கைநெறிகளைப் பயில்வதற்காகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான அனுமதிக் கடிதம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மாணவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி கற்கை நெறிகளுக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள், பின்வரும் ஆவணங் களுடன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் நேரில் வந்து தங்கள் பதிவை யாழ்.பல்கலைக் கழக பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (தொலைபேசி - 021 - 222 6714)

| இல | கற்கை நெறி | பதிவுசெய்யும் திகதி | நேரம் |
|---|---|---|---|
| 1 | மருத்துவம் | 24.05.2006 | 09.00 - 12.00 |
| 2 | விஞ்ஞானம் (உயிரியல்) | 24.05.2006 | 09.00 - 12.00 |
| 3 | வர்த்தகம் | 25.05.2006 | 09.00 - 12.00 |
| 4 | முகாமைத்துவம் | 25.05.2006 | 09.00 - 12.00 |
| 5 | விவசாயம் | 26.05.2006 | 09.00 - 12.00 |
| 6 | சித்தமருத்துவம் | 26.05.2006 | 09.00 - 12.00 |
| 7 | சட்டம் | 26.05.2006 | 09.00 - 12.00 |
| 8 | சித்திரமும் வடிவமைப்பும் | 26.05.2006 | 09.00 - 12:00 |

பதிவு செய்யப்படாதோரின் பெயர்ப் பட்டியல் 01.06.2006 இற்கு முன்னதாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பவேண்டியுள்ளதால் தங்களது பதிவினை மேற்படி திகதிகளில் தவறாது மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மேற்படி கற்கைநெறிகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவிக்கப் படும்.

**சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள்**

1. பிறப்புச் சான்றிதழ் (மூலப்பிரதியும், போட்டோப் பிரதியும்)
2. பாடசாலை விடுகைப் பத்திரம் (மூலப்பிரதியும், போட்டோப் பிரதியும்)
3. நிழற்படப் பிரதி (அளவு 2" X 2 ½ " ) கறுப்பு வெள்ளை - 08 பிரதிகள்
4. பல்கலைககழக மானிய ஆணைக்குழுவால் அனுப்பப்பட்ட கடிதம்
5. தேசிய அடையாள அட்டையின் போட்டோப் பிரதி
6. க.பொ.த (உயர்தரம்) பெறுபேறும் அதன் "Z" ஸ்கோர் விபரமும் (மூலப்பிரதியும், போட்டோ பிரதியும்)

**செலுத்தவேண்டிய கட்டணங்கள்**

பதிவுக் கட்டணம் ரூபா 150 /-

ஆய்வுகூடக் கட்டணம் ரூபா 300 /-
(விஞ்ஞானம் / விவசாயம் / மருத்துவம் / சித்த மருத்துவம் / சித்திரமும் வடிவமைப்பும்)

வைத்தியக் கட்டணம் ரூபா 100 /-

கைநூல் ரூபா 65 /-

மாணவர் வழிகாட்டி நூல் ரூபா 10 /-

தெரிவுசெய்யப்பட்டோரின் பெயர்ப் பட்டியலை யாழ்.பல்கலைக்கழக பரீட்சைகளும் அனு மதிகளும் கிளை விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

யாழ்ப்பாணம் தவிர்ந்த பிற மாவட்ட மாணவர்களுக்கு பதிவு விண்ணப்பப் படிவங்கள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. விண்ணப்பப் படிவங்கள் கிடைக்காதோர் 021 - 222 6714 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும்.

**பதிவாளர்**
**18.05.2006.**

[C/5334]

'நமது ஈழநாடு' நிறுவனம்
தமிழ் கலை, இலக்கிய
ஊடக நண்பர்கள் அமைப்புடன்
இணைந்து நடத்திய

## எழுத்தாளர் செம்பியன் செல்வன் நினைவு சிறுகதைப் போட்டி முடிவுகள்

**முதலாம் பரிசு** (ரூ.5000) - "முகாம்"
சி.கதிர்காமநாதன்
டச் வீதி, தொல்புரம்
கிழக்கு, சுழிபுரம்,

**இரண்டாம் பரிசு** (ரூ3000) - "விழி மூடி நரி வெறி..."
சி.சுதந்திரராஜா
தாவடி வடக்கு,
கொக்குவில்.

**மூன்றாம்பரிசு** (ரூ2000) - "மது எதற்கு?".
எஸ்.பி.கிருஷ்ணன்,
145,கனகாம்பிகைக்
குளம், கிளிநொச்சி.

போட்டிகளில் பரிசு பெற்றோருக்கான பரிசளிப்பு நிகழ்வு குறித்த விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

பிரதம ஆசிரியர்

**மனோகரா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின அதிரடி வெளியீடு
அஜித்குமார், சதா மற்றும் பலர் நடித்த
மூன்றாவது வெற்றி வாரம்
திருப்பதி

காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
S.J.சூர்யா
நயன்தாரா
நடித்த

கள்வனின் காதலி
காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

## சிறுவிளம்பரங்கள்

### வீடு வாடகைக்கு

சுன்னாகம் கிழக்கு சூறாவத்தையில் பாதுகாப்பான சூழலில் வீடு வாடகைக்கு உண்டு.

வாடகை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு - 077 3623101

(2274)

யாழ். நகரில் எல்லா வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு - கோபி 785 ,
ஆஸ்பத்திரி வீதி.
தொ.பேசிஇல -021- 222 9615

C/5333

## முக்கிய அறிவித்தல்

எங்களிடம் மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்த வாடிக்கையாளர்கள் உடனடியாக புத்தகப் பதிவினை மேற்கொள்ளவும், அல்லது புத்தகப் பதிவுக்கான ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளவும். தவறும் பட்சத்தில் பின்விளைவுகளுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல என்பதை அறியத்தருகின்றோம்.

[C/4471]

நிர்வாகி,
சிவகுரு உந்துருளி வாணிபம்,
பரந்தன்.

## தவறிவிட்டது

471485456 V என்ற இலக்கமுடைய தா.செல்வவேலாயுதம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை, உடையார் கட்டுக்கும் புதுக்குடியிருப்புக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அதனை கிளி / கரடிப்போக்கு நமது ஈழநாடு காரியாலயத்தில் அல்லது புதுக்குடியிருப்பு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு வேண்டுகிறோம்.

தா.செல்வவேலாயுதம்,
மூங்கிலாறு, உடையார்கட்டு.

[C/4475]

# படையினர் மீதான தாக்குதலை தடுக்க புலிகளைத் தடைசெய்ய வேண்டும்!

## என்கிறார் மங்கள சமரவீர




கொழும்பு —

அரச படைகள் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தாமல் இருப்பதற்கு சர்வதேச சமூகம் புலிகளைத் தடைசெய்ய வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர வலியுறுத்தியுள்ளார்.

ஜப்பான் சென்றுள்ள மங்கள சமரவீர டோக்கியோவில் தொழிலதிபர்களுடனான கலந்துரையாடலின் போது பேசியதாவது -

இலங்கையில் அண்மைக்காலமாக வன்முறைகள் தொடரும் போதும் அரசாங்கம் அமைதி முயற்சிகளில் ஈடுபாட்டுடன் உள்ளது.

நாங்கள் எப்போதும் பேச்சு மூலமாகத் தீர்வு காணவே விரும்புகிறோம்.

1985 ஆம் ஆண்டு தொடக்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசாங்கங்கள் பேச்சுக்கள் நடத்த முனைந்த போதும், அவர்கள் ஜனநாயகத்தை ஏற்றுக்கொள்ளும் போக்கில் இன்னமும் இல்லை.

யசூஷி அகாஷி தலைமையில் ஜப்பானிய அரசாங்கம் இலங்கை அமைதிக்காக மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு நாம் நன்றி கூறுகிறோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளை பேச்சு மேசைக்குக் கொண்டு வருவதற்கு மேலதிக சர்வதேச அழுத்தம் தேவை.

விடுதலைப் புலிகள் அமைப்பை தடை செய்து, அதன் சொத்துக்களை முடக்கி, அலுவலகங்களை மூடும் நடவடிக்கைகள் மூலமாகவே எங்கள் மீதான தாக்குதல்களை நிறுத்தி விட்டு, பேச்சு மேசைக்கு அவர்கள் திரும்புவார்கள். அது சர்வதேச சமூகத்தினால்தான் செய்ய முடியும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, ஜப்பானில் சர்வதேச செய்தி நிறுவனமான ஏ.எப்.பிக்குக்கு மங்கள சமரவீர அளித்த நேர்காணலில் கூறியதாவது -


தமிழீழ விடுதலைப் புலிகளை பேச்சு மேசைக்குத் திரும்ப வைப்பதற்கான செயற்திட்டங்களை இணைத் தலைமை நாடுகள் உருவாக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

சர்வதேச சமூகம் என்னென்ன வழிகளில் எல்லாம் செல்வாக்கைச் செலுத்த முடியுமோ அப்படிச் செய்தால்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் பேச்சு மேசைக்குத் திரும்புவார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் தடைசெய்து அந்த நாடுகளில் நிதி வசூலிப்பதைத் தடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

# புலிகளின் வசமுள்ள பகுதிகளை மீண்டும் கைப்பற்ற முடியுமாம்!

## கொட்டகதெனிய தெரிவிப்பு



கொழும்பு —

இலங்கையில் மீண்டும் போர் ஏற்படலாமெனவும் அவ்வாறு போர் ஏற்பட்டால் போர் நிறுத்த உடன்படிக்கை மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் வசமுள்ள நிலப்பரப்பை மீண்டும் தங்களால் கைப்பற்ற முடியுமெனவும் ஜனாதிபதியின் ஆலோசகரும் முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபருமான கொட்டகதெனிய தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

பயங்கரவாதத்தை ஒழிக்காமல் சமாதானத்தை உருவாக்கமுடியாது. அத்துடன், நாட்டின் இறையாண்மையைப் பாதுகாக்கத் தயாரா இல்லையா என்பதை நாட்டின் அரசியற் தலைவர்கள் தீர்மானிக்க வேண்டும்.

இந்த நிலையில் போர் ஏற்பட்டால், இரண்டு தரப்பும் அதில் வெற்றி பெற முடியாது எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், மூவாயிரம் ஆண்டுகள் நாட்டைப் பாதுகாத்து நாட்டை நேசிக்கும் சிங்கள மக்களால் எந்த தமிழ் படைகளையும் முறியடித்து அதில் வெற்றிபெறமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பிரதமருக்கான சம்பளத்தை அதிகரிப்பதற்கு பிரேரணை

கொழும்பு —

கடந்த வருடம் டிசம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் பிரதமருக்கான சம்பளம் அதிகரிப்பதை நடை முறைப்படுத்தும் விதமாக 46 ஆயிரத்து 400 ரூபாவாக அதிகரிப்பது குறித்த பிரேரணை நாடாளுமன்ற விவகார அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால மூலம் நாடாளுமன்றுக்கு சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கவுக்கு இந்த வருடம் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி தொடக்கமும், ஜனாதிபதிக்கு கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி தொடக்கமும் பிரதமர் பதவி வகித்த காலப் பகுதிக்கான சம்பள நிலுவைப் பணம் கிடைக்கும்.

இந்தச் சம்பள அதிகரிப்பு பிரேரணைக்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது. (தே)

# இரணைமடு விமானத்தளம் பலத்த சேதமடைந்துள்ளதாம்!

## என்கிறார் விமானப்படைத்தளபதி

கொழும்பு —

தமிழீழ விடுதலைப் புலிகளின் இரணைமடு விமானப்படைத் தளத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக விமானப்படைத் தளபதி எயார் வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா தெரிவித்தார்.

விமானப்படையினரின் அண்மைய குண்டுவீச்சில் இரணைமடு விமானப்படைத் தளம் சேதமடைந்திருப்பதற்கான புகைப்படங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும்,

இரணைமடு தாக்குதல் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கையே எனவும் கூறிய டொனால்ட் பெரேரா - முல்லைத்தீவு வான் பகுதியில் புலிகளின் விமானம் இயக்கப்படுவது குறித்து விமானப்படையினர் அவதானமாக உள்ளனர் என்றும் தெரிவித்தார்.

# வடக்கு-கிழக்கிலேயே பட்டினி கிடப்போர் அதிகம்

## என்கிறது ஐ.நா.

கொழும்பு —

இலங்கையின் வடக்கு- கிழக் கில் பட்டினி கிடப்போர் தொகை அதிகமாக இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்ட அமைப்பு தெரிவித்துள்ளது.

உலக உணவுத் திட்ட அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி ஜெப் டப்ட்டிக் இது குறித்து கூறியுள்ளதாவது -

உலகம் முழுவதிலும் பட்டினிதான் பாரிய பிரச்சினையாக உள்ளது. பல்வேறு நாடுகள் இதற்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றன.

இலங்கையைப் பொறுத்தவரையில் குறிப்பாக வடக்கு- கிழக்கில் இது ஏழு வீதமாகவுள்ளது.

இலங்கையில் மொத்தம் 3 இலட்சத்து 15 ஆயிரம் குழந்தைகளுக்குப் போதுமான உணவு கிடைப்பதில்லை. பாடசாலைகளில் வழங்கப்படுகின்ற உணவுத் திட்டத்தின் கீழ் அவர்கள் உணவைப் பெற்று வருகின்றனர். ஆனால், 1375 பாடசாலைகளில் மட்டுமே இந்த திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்தார்.

# மருத்துவ மனைகளுக்கு 500 தாதியர்கள் நியமனம்

கொழும்பு —

வடக்கு - கிழக்கிலுள்ள மருத்துவ மனைகளுக்கு 500 தாதியர்களை நியமிக்க சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் சில நாட்களில் வெளி யிடப்படும்.

தாதியர் தெரிவுக்கான விண்ணப்பங்கள் ஜூன் மாதம் 23ஆம் திகதி வரை வழங்கப்படும். தெரிவு செய்யப்படவுள்ள தாதியர்களுக்கு 3 ஆண்டு கால பயிற்சி வழங்கப்படும் என்று சுகாதார அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மென் தீவிர யுத்தம் நடப்பதாக கூறப்படுவதை அரசு நிராகரிப்பு!

கொழும்பு —

மென் தீவிர யுத்தம் நடைபெறுவதாகக் கூறப்படுவதை அரசாங்கம் மறுத்துள்ளது. இது தொடர்பாக கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்ப கூறியதாவது -

அமைதி முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபாட்டுடன் உள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களை தொடர்வதற்கான எல்லா நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளால் வன்முறைகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. ஆனால், அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஒரு மென் தீவிர யுத்தம் நடைபெறுவதாகக் கூறப்படுவது தவறானது.

கண்ணிவெடிகள் மூலம் படையினரை விடுதலைப் புலிகள் கொன்று விடுகின்றனர். நாம் அமைதிப் பேச்சுக்களை மீளத் தொடங்குவதற்கான அனைத்தையும் செய்து வருகிறோம்.

பேச்சுக்களை மீண்டும் தொடங்கவே அரசாங்கம் விரும்புகிறது. ஜெனீவா இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களை உடனே நடத்த வேண்டும் என்று அரசாங்கம் விரும்புகிறது. இது விடயத்தில் அரசாங்கம் தெளிவாகவுள்ளது.

இரண்டாம் சுற்றுப்பேச்சுக்களுக்கான உறுதியான ஒரு நாளை தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவிக்க வேண்டும். விமானசேவையையும், அதிக இருக்கை கொண்ட விமானங்களையும் விடுதலைப் புலிகள் கோரியிருந்தனர். நாம் அதற்கு ஒப்புக் கொண்டோம். எனவே, விடுதலைப் புலிகள் பேச்சுக்கான நாளை அறிவிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

## மனித உரிமைக் குழுத் தலைவராக நீதிபதி இராமநாதன் நியமனம்

கொழும்பு —

இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி பி.இராமநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிறப்பித்துள்ளார்.

மனித உரிமைகள் ஆணைக் குழு உறுப்பினர்களாக டி.ஜயவிக்கிரம, எஸ்.ஜி.புஞ்சிஹேவ, நளினி அபேய வர்த்தன மற்றும் எம்.டி.எம். பசீக் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# இருதரப்பும் பேச்சுக்குத் திரும்ப அமெரிக்கா வலியுறுத்து

கொழும்பு —

இலங்கை அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் பேச்சு மேசைக்குத் திரும்ப வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

தென் மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் பிரதிச் செயலாளர் ரிச்சர் பௌச்சர் இது தொடர்பாக கூறியதாவது -

இலங்கையில் அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளின் வன்முறைகள் அதிகரித்துள்ளன. இதனால் மீண்டும் ஒரு யுத்தத்தை நோக்கி அந்தநாடு திரும்பியுள்ளது.

இணைத் தலைமை நாடுகளுடன் அமெரிக்கா இணைந்து செயற்படுகிறது. இலங்கை அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் பொறுமை காத்து, பேச்சு மேசைக்கு திரும்ப வேண்டும்.

ஜெனீவா பேச்சுக்களுக்குப் பின்னர் அதிகரித்த வன்முறைகளால் அமைதி முயற்சிகள் முடங்கிப் போயுள்ளன என அவர் தெரிவித்தார்.

# இலங்கைக்கு நவீன ஆயுதங்களை வழங்குவதற்கு இந்தியா இணக்கம்

கொழும்பு —

இலங்கைக்கு நவீன ஆயுதங்களை வழங்குவதற்கு இந்திய அரசு உடன்பட்டுள்ளதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இதன்படி விமானங்களைக் கண்டறியும் நவீன ராடர் கருவிகளை வழங்குவதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த ராடர் கருவிகள் இந்த வாரம் கப்பல் மூலம் எடுத்து வரப் படவுள்ளதாக படைத்தரப்பு தகவல்கள் தெரிவித்தன.

இரண்டு நாட்டுத் தலைவர்களும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் அண்மையில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இந்தியாவுக்கு மேற்கொண்ட பயணத்தின் பெறுபேறு இது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - தற்போதைய நிலைமையின் கீழ் முப்படைகளுக்கும் தேவையான ஆயுதங்களை இந்தியாவிடமிருந்து பெறும் வகையில் பேச்சுக்களை நடத்துவதற்காக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கடந்த செவ்வாய்க்கிழமை இந்தியாவுக்குச் சென்றுள்ளார்.

இவர் இந்திய பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் ஆயுதங்கள் மற்றும் யுத்த தளபாடங்களை பெறுவது தொடர்பாக பேச்சுக்களை நடத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவித்தன.

அவசர தேவையின் கீழ் இலங்கை முன்னர் பாகிஸ்தானிடமிருந்து ஆயுதங்கள் மற்றும் யுத்த தளபாடங்களை பெறுவதற்கு ஆராய்ந்திருந்தாலும், தற்போது இந்தியா ஆயுதங்கள் மற்றும் போர்த் தளபாடங்களை வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளதால், இந்தியாவிடமிருந்து ஆயுதங்களை வாங்குவதற்கு அரசாங்கம் முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (தே)

# ஒரே நாளில் 102 பேர் தமிழகம் வருகை!

சென்னை —

தமிழகத்தில் இராமேஸ்வரம் தீவுப் பகுதிக்கு நேற்றுமுன்தினம் ஒரே நாளில் அதிக அளவாக ஈழத்தமிழ் அகதிகள் 102 பேர் வந்துள்ளனர்.

இவர்கள் பயணம் செய்த படகு ஒன்றையும், இந்திய கடற்படையினர் பறிமுதல் செய்து, தமிழக காவல் துறையிடம் ஒப்படைத்தனர்.

ஒரே நாளில் 102 பேர் அகதிகளாக இராமேஸ்வரம் தீவுப்பகுதிக்கு வந்தது இதுவே முதல் முறையாகும்.


விசாரணைகளுக்குப் பின் அவர்கள் அனைவரையும் மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமுக்கு காவல் துறையினர் அனுப்பிவைத்தனர்.

கடந்த ஜனவரி மாதம் 12 ஆம் திகதி முதல் இராமேஸ்வரம் தீவுப் பகுதிக்கு ஏராளமான ஈழத் தமிழ் அகதிகள் வந்துகொண்டிருக்கின்றனர்.

இதுவரை தமிழகம் வந்த அகதிகள் - 1016 ஆக உயர்ந்துள்ளது.

# தேசியத் தலைவருக்கு தோள் கொடுக்கும் தருணம் தமிழ் மக்களுக்கு வந்துவிட்டது

## நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி



கிளிநொச்சி

தாயக விடுதலைக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் தமிழீழ தேசியத் தலைவருக்கு தமிழ்மக்கள் அனைவரும் தோள்கொடுக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது என நிதித்துறைப் பொறுப்பாளர் செ.வ. தமிழேந்தி தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்றுமுன் தினம் நிதித்துறைக் கணக்காய்வுப் பொறுப்பாளர் அறவாணன் தலைமையில் சமகால அரசியல் கருத்தரங்கு நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட நிதித்துறைச் செயற்பாட்டாளர்கள் மத்தியில் சமகால அரசியல் நிலவரம் குறித்து செ.வ.தமிழேந்தி சிறப்புரையாற்றினார்.

அவர் ஆற்றிய சிறப்புரையில் தெரிவித்துள்ளதாவது -

தமிழினத்தை ஒழிக்க வேண்டும், இலங்கைத்தீவு சிங்களவருக்கு மட்டும் உரியது என்று சிங்கள அரசுகள் தமிழினத்தைப் பல்வேறு வழிகளில் தீவிரமாக அழித்து வருகின்றன. ஆனால், தமிழ் மக்கள் இலங்கைத்தீவில் சிங்களவரும் வாழ வேண்டும். அதேவேளை, தமிழ்மக்கள் தமது தாயகத்தில் உரிமைகளுடன் வாழ வேண்டும் என்பதற்காகத்தான் போராடுகிறார்கள்.

ஆனால், அரசோ வரலாற்றில் தமிழினத்தை அழிக்க வேண்டும். இங்கு சிங்கள இனம் மட்டுமே வாழ வேண்டும் என்று இன அழிப்பை மேற்கொண்டு வருகிறது.

தற்போது சமாதான உடன்படிக்கை ஒன்று அப்படியே இருக்கிறது. அதே நேரத்தில் தமிழர் மீதான கொலைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. அரசாங்கம் தன்னுடைய இராணுவத்தோடு இயங்குகின்ற துணைப் படைகள் மூலம், விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களையும், தமிழ்த் தேசியப் பற்றாளர்களையும் கொன்று குவித்து வருகிறது.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் வந்த பின்னர், அமைதி முயற்சிகள் சீர்குலைந்து வருகின்றன. இருந்த போதிலும் தமிழீழ தேசியத் தலைவர் மிகவும் பொறுமை காத்து இந்த அரசாங்கத்துடன் பேசுவதற்கு முன் வந்தார்.

ஜெனிவாவில் பேச்சுக்கள் நடந்தன. அதில் துணைக்குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களைவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ஆனால், அதன் பின்னர் திருகோணமலையில் தமிழ்த் தேசியத்துக்காக உழைத்த விக்னேஸ்வரன் படுகொலை செய்யப்பட்டார். தொடர்ந்தும் கொலைகள் நடக்கின்றன.

ஆகவே, இன்றைய சூழலில் வலுவுள்ள அனைவரும் அகவை வேறுபாடு இன்றி போர்ப் பயிற்சி பெற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அப்போதுதான் தமிழர் தம்மை பாதுகாத்துக் கொள்ளமுடியும்.

ஊடுருவல் குழுக்களால் விடுதலைப் புலிகள் மட்டுமின்றி, மக்களும் தாக்கப்படுகின்றனர், கொல்லப்படுகின்றனர். இதனால் மக்கள் அனைவரும் போர்ப் பயிற்சி பெறவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

தாயக விடுதலைக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து, தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கும் தமிழீழ தேசியத் தலைவருக்குத் தமிழ் மக்கள் அனைவரும் தோள்கொடுக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. விடுதலையைப் பெற வேண்டிய காலம் வந்து விட்டது எனத் தெரிவித்தார்.

# இளையோர் அறிவியற் கழகத்தில் கற்கை நிறைவு சான்றிதழ்கள்!



விசுவமடு

இளையோர் அறிவியற் கழகத்தில் கற்கைநெறியைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் மாலை விசுவமடு இளையோர் அறிவியற்கழக மண்டபத்தில் நடைபெற்றது.

சான்றிதழ்களைப் பெற்ற மாணவர்கள் - இந்தக் கழகத்தில் பயிற்சி பெற்ற முதல் அணியினர் ஆவர். 90 மாணவர்கள் இவ்வாறு பயிற்சி பெற்று வெளியேறியுள்ளனர். இவர்களது பயிற்சி வெளிப்பாடாக கழகத்தில் மூன்று நாட்கள் அறிவியல் கண்காட்சி நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

# பயணிகள் நலனில் அக்கறை செலுத்தாத தனியாரின் பயண அனுமதி இரத்தாகும்!

## மன்னார் மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

மன்னார்

பயணிகளின் நலனில் அக்கறை செலுத்தாது, லாபமே குறியென செயற்பட்டு, பயணிகளை இடைநடுவே இறக்கிவிட்டுச் செல்லும் தனியார் பஸ் வண்டிகளின் பயண வழித் தடத்துக்கான அனுமதிப் பத்திரம் உடன் ரத்துச் செய்யப்படும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் போக்குவரத்துக்குச் சேவைகளை வழங்கும் தனியார் போக்குவரத்துச் சங்கத்தினர், இலங்கை போக்குவரத்துச் சபையினர் மற்றும் ஊடகவியலாளர்களுக்கான சந்திப்பொன்று கடந்த செவ்வாய்க்கிழமை மாலை அரசாங்க அதிபரின் காரியாலயத்தில் நடைபெற்ற போதே மன்னார் அரசாங்க அதிபர் வி.விஸ்வலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

சில தனியார் பஸ் வண்டிகளின் சாரதிகள், நடத்துனர்கள் பொது மக்களின் நலன்களில் அக்கறை கொள்ளாமல் பொறுப்பற்ற விதத்தில் நடக்கின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் கொழும்பு - மன்னார் பேரூந்து சேவைகளின் போதே நடைபெறுவதால், எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து, மன்னார் நோக்கிவரும் சில பஸ் வண்டிகளில் இருந்து பயணிகள் நள்ளிரவு நேரங்களில் மதவாச்சி பகுதிகளில் இறக்கி விடப்படுவதாகப் பொதுமக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது மிகவும் பாரதூரமான செயல். இன்றைய சூழ்நிலையில் இவ்வாறு பயணிகளை இடைநடுவே இறக்கி விடும் பொழுது, பயணிகள் பாதுகாப்புக்கு யார் பொறுப்பு நிற்பது? பயணிகளின் நலனில் அக்கறை இன்றி லாபமே குறியென்று செயற்பட்டு பயணிகளை பயணத்தின் இடைநடுவே இறக்கிவிட்டுச் செல்லும் தனியார் பஸ் வண்டிகளின் வழித்தடத்துக்கான அனுமதிப்பத்திரம் எந்தவித தாமதமுமின்றி உடன் ரத்துச் செய் யப்படும் என அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (மோ)

# தற்காப்பு பயிற்சி ஆரம்பம்

கிளிநொச்சி

அக்கராயன் மேற்குப் பிரதேச மக்களுக்கான தற்காப்புப் பயிற்சி ஆரம்ப நிகழ்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

அக்கராயன் சவாரித்திடலில் சுபாஸ்குடியிருப்புத் தலைவர் அருள் ஜோதிநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பொதுச் சுடரை மாவீரர் செஞ்சுடரின் தாயார் மற்றும் அருளானந்த சிவம் ஆகியோர் ஏற்றினர்.

தமிழீழ தேசியக் கொடியை அக்கராயன் பிரதேச சிறப்பு வேலைத் திட்டப் பொறுப்பாளர் கானகன் ஏற்றி சிறப்புரையை நிகழ்த்தினார்.

கருத்துரைகளை பிரதேசப் பொறுப் பாளர் சிறி, கிராம அலுவலர் மகேந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர். பயிற்சி நிகழ்வில் நூற்றுக்கணக்கானோர் பங்குகொண்டனர்.

* * *

மன்னார் இலுப்பைக்கடவையில் மேஜர் கௌரி மக்கள் படை கட்டுமானப் பயிற்சிப் பாசறையில் 4 ஆம் அணிக்கான பயிற்சிகள் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகியது.

இதில் பொதுச் சுடரை - இலுப்பைக் கடவை அரசியற்துறைப் பொறுப்பாளர் ஜீவா ஏற்ற, தேசியக் கொடியை இலுப்பக்கடவை கோட்ட கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்பு ஏற்றினார். (கு)

# மலரவன் அறிவியல் பூங்காவில் விளையாட்டுப்போட்டி நிகழ்வுகள்

கிளிநொச்சி

கிளிநொச்சியில் அமைந்துள்ள மலரவன் மழலைகள் அறிவியல் பூங்காவின் அறிவியல் சார்ந்த உள்ளக, வெளியக விளையாட்டு நிகழ்வுகள் எதிர்வரும் ஜுன் மாதம் பத்தாம் திகதி நடைபெறவுள்ளன.

எனவே, இந்த விளையாட்டுக்களில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னதாக அறிவியல் பூங்காவில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன், அறிவியல் சார்ந்த உள்ளக, வெளியக விளையாட்டுக்களும் மற்றும் மகிழ்வூட்டும் விளையாட்டுக்களும் நன்கு பயிற்சியளிக்கப்பட்டபின்பே போட்டிகள் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.


# வியாபாரிகள் பெரும் சிரமம்

கிளிநொச்சி

முல்லைத்தீவு பிரதேச உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களின் உரியமையாளர்கள் தமது வியாபார நிலையங்களுக்கான அரசாங்க பதிவை மேற்கொள்ளமுடியாது பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (கு)

# நினைவுக் கல் திரைநீக்கம்





முல்லைத்தீவு

முல்லைத்தீவு திருமுருகண்டி இந்து வித்தியாலயத்தில் கல்வி கற்று தேசவிடுதலைப் போராட்டத்தில் இணைந்து வீரகாவியமான மாவீரர்கள் நினைவுக்கல் திரை நீக்க நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 12.25 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமான இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை பாடசாலை அதிபர், வர்த்தக சங்கத்தலைவர், ஊரக மேம்பாட்டுத் தலைவர் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியை பிரதேசப் பொறுப்பாளர் சுடர் ஏற்றினார்.

நினைவுக்கல்லை இந்தப் பாடசாலையில் கல்வி கற்று தேசவிடுதலைப் போராட்டத்தில் முதல் வீரச்சாவடைந்த மாவீரர் கூர்வேலின் தாயார் திரைநீக்கம் செய்து வைத்தார்.

தொடர்ந்து ஏனைய மாவீரர்களின் பெற்றோர்கள் சுடரேற்றி, மலர்மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து அரங்கில் கருத்துரைகள், நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. (கு)

# 276 நோயாளர்களுக்கு சென்றமாதம் சிகிச்சை

மன்னார்

மன்னார் - முள்ளிக்குளத்திலுள்ள தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையில் கடந்த மாதம் 276 நோயாளர்கள் சிகிச்சை பெற்றனர்.

வைரஸ் காய்சலுக்கு 71 பேரும், சுவாசப்பாதைத் தொற்றுக்கு 67 பேரும், பல்நோய்களுக்கு 04 பேரும், தோல் நோய்களுக்கு 13 பேரும், ஒவ்வாமைக்குப் பத்துப் பேரும் ஏனைய நோய்களுக்குமாக மொத்தம் 276 பேர் இந்த மருத்துவ சேவையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

அத்துடன், சுகாதார சேவையாளர்களால் கீரிசுட்டான் கிராம மக்களுக்குச் சுகாதாரக் கருத்தூட்டல் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

இதே மாதத்தில் அயல் கிராமங்களான சின்னவலயன்கட்டு, முள்ளிக்குளம் ஆகிய பாடசாலைகளில் முதலுதவி வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முள்ளிக்குளத்தில் சுகாதாரக் குழுவுக்கு ஐந்து உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

# சமாதான நீதவானாக நியமனம்

வவுனியா



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது வவுனியாவை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட ல.சதீஸ்குமார் வவுனியா மாவட்டத்துக்கான சமாதான நீதவானாக வவுனியா மாவட்ட உயர்நீதிமன்ற நீதிபதி விஸ்வநாதன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் முன்னாள் யாழ்.உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியரும், தற்போது வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய ஆசிரியருமாவார். இவர் ஒரு கலைப் பட்டதாரி என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்—

ஜோன் பொஸ்கோ பாடசாலையில் தரம் 5 வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் இன்று முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே சகல பெற்றோர்களையும் இந்தக் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார்.

## போட்டிகள் பிற்போடப்பட்டன

யாழ்ப்பாணம்—

திருவள்ளுவர் விழாவை முன்னிட்டு வடமராட்சி வலய மட்ட பாடசாலை மாணவர்களிடையே கரணவாய் மத்தி கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக் கழகம் இன்றும், நாளையும் நடத்தவிருந்த போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. இது பற்றி பின்னர் அறிவிக்கப்படுமென கழகத்தின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

# வடமராட்சி கிழக்கு பகுதிகளுக்கு வெளியார் செல்லத் தடைவிதிப்பு

யாழ்ப்பாணம்—

வடமராட்சி கிழக்குப் பகுதிகளுக்கு வெளியிடங்களைச் சேர்ந்தவர்கள் செல்வதற்குப் படையினரால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சி கிழக்குப் பகுதிக்குச் செல்வோர் வல்லிபுர ஆழ்வார் கோவிலுக்கு அருகிலுள்ள வீதித்தடையில் வைத்து படையினரால் சோதனை மேற்கொள்ளப்படும்போது - குடத்தனை மற்றும் மணற்காடு என அடையாள அட்டையில் வதிவிடம் குறிப்பிடப்பட்டிருந்தால் மட்டுமே உள்ளே செல்ல அனுமதி வழங்கப்படுகிறது.

இதனால் வேறு இடங்களைச் சேர்ந்தவர்கள் அந்தப் பகுதிக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மணற்காடு, குடத்தனை போன்ற பகுதிகளுக்கு மரக்கறி வியாபாரிகள்கூட உட்செல்ல அனுமதி வழங்கப்படாததால் அந்தப் பகுதி மக்கள் மரக்கறி வகைகளைப் பெற்றுக் கொள்வதற்குப் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சோதனைச் சாவடியில் சாதாரண உடையில் நன்கு தமிழில் பேசுகின்ற இரண்டு படையினரே இந்தப் பதிவுகளை மேற்கொள்வதுடன், அந்தப் பகுதிக்குச் செல்லும் வாகனங்களின் இலக்கங்களையும் பதிவு செய்து கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறையிலிருந்து குடத்தனைப் பகுதியை நோக்கிப் படையினரின் பவள் கவச வாகனங்கள் அதிகளவில் போக்குவரத்தில் ஈடுபடுவதனாலேயே இந்த நடைமுறை பின்பற்றப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### அகவை ஒன்று



பெயர் : வி.விதுசாந்
முகவரி : சுவிஸ்.

### அகவை ஐந்து



பெயர் : த.சுஜிந்தன்
முகவரி : சுன்னாகம்.

## இராணுவ கெடுபிடிகள் அதிகரிப்பு; வைத்தியசாலைக்கு செல்ல அச்சம்!

வடமராட்சி—

பருத்தித்துறை - மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு அருகிலுள்ள இராணுவ முகாம் புனரமைக்கப்பட்டு வருவதோடு, அந்தப் பகுதியில் இராணுவத்தினர் வீதித்தடைகளையும் ஏற்படுத்தியுள்ளனர்.

மந்திகை ஆதார வைத்தியசாலைப் பகுதியில் இராணுவத்தினரின் நடமாட்டங்கள் அதிகரித்துள்ளமையால், வைத்தியசாலையிலுள்ள நோயாளர்கள் பெரும் அச்சத்துக்குள்ளாகி வருகின்றனர். அத்தோடு மாலையிலும், இரவு வேளைகளிலும் பொது மக்கள் வைத்தியசாலைக்குச் செல்வதையும் தவிர்த்து வருகின்றனர்.

மந்திகைச் சந்திப் பகுதியில் நிற்கும் இராணுவத்தினர் அந்தவீதியால் செல்வோரை பரிசோதனைகளுக்குட்படுத்தி வருவதோடு, மாலை மற்றும் இரவு நேரங்களில் பயணிப்போரை விசாரணைக்கு உட்படுத்திவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## நிர்வாகிகள் தெரிவு

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் நலன்புரிச் சங்க புதிய நிர்வாகிகள் தெரிவு கடந்த வாரம் நடைபெற்றது.

வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி கலாநிதி கதிரவேற்பிள்ளை தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - நிர்வாக குழுவின் புதிய தலைவராக வைத்தியர் எஸ்.கதிரவேற்பிள்ளை, உபதலைவராக எஸ்.சின்னத்தம்பி, பொருளாளராக எஸ்.பத்மநாதன், செயலாளராக கே.சிறிதரன் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் 9 பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

### வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு :
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்

## கோப்பாய் பகுதியில் தொடரும் மின்வெட்டால் மக்கள் விசனம்

யாழ்ப்பாணம்—

கோப்பாய் பகுதியில் ஒவ்வொரு நாளும் இரவு வேளைகளில் மின்வெட்டு ஏற்படுவதால் அந்தப் பகுதி மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்தப் பகுதியில் இரவுவேளைகளில் மணித்தியாலக் கணக்கில் மின்சாரம் தடைப்படுவதால் மக்கள் பெரும் சிரமமடைகின்றனர்.

இதனால் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் இரவு வேளைகளில் கல்வி கற்க முடியாத நிலை ஏற்படுகிறது.

மின்சாரம் தடைப்படுவதற்கான காரணத்தை மின்சாரசபையிடம் மக்கள் கேட்டபோது அதற்கான உரிய பதில் அளிக்கப்படுவதில்லை எனவும் அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

## வயோதிபரை மிரட்டி அவரிடமிருந்த பணத்தை பறித்த படையினர்

யாழ்ப்பாணம்—

வயோதிபர் ஒருவரை கத்தியைக் காட்டி மிரட்டிய இராணுவத்தினர் அவரிடமிருந்த பணத்தை அபகரித்த சம்பவம் ஒன்று கோப்பாய் பகுதியில் இடம்பெற்றது.

கடந்த புதன்கிழமை அச்சுவேலி பகுதியிலிருந்து இராச வீதியூடாக சைக்கிளில் வந்து கொண்டிருந்த குறித்த வயோதிபரை கோப்பாய் பகுதியில் வழிமறித்த இராணுவத்தினர் கத்தியைக் காட்டி மிரட்டி அவரிடமிருந்த பணத்தை அபகரித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் பத்திரிகைகளை விற்பனை செய்துவரும் அப்பாவி வியாபாரியான வயோதிபர் அவசர தேவை ஒன்றுக்காக எடுத்துச் சென்றிருந்த 23 ஆயிரம் ரூபா ரொக்கப் பணத்தையே படையினர் அபகரித்துள்ளனர்.

இதனால் மனமுடைந்த வயோதிபர் அந்தப் பகுதி இராணுவ முகாமிலும் கோப்பாய் பொலிஸ் நிலையத்திலும் சென்று முறையிட்டுள்ளார்.

யாழ். குடாநாட்டில் இராணுவ நெருக்கடிகள், சோதனைகள் அதிகரித்துள்ள நிலையில் - இராணுவத்தினரே பட்டப்பகலில் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வருவதால் பொது மக்களிடையே பெரும் அச்சநிலை உருவாகியுள்ளது.



யாழ். சென். மேரிஸ் வித்தியாலய மென்வன்மைப் போட்டியில் இடம் பெற்ற இசையும் - அசைவும் நிகழ்ச்சியில் மாணவிகள் ஈடுபட்டு நிற்பதைப் படத்தில் காணலாம். (206)

## உயர்தர பரீட்சைக்கு 10,000 பேர் யாழ். மாவட்டத்தில் தோற்றுவர்

யாழ்ப்பாணம்—

எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள உயர்தரப் பரீட்சை யாழ். மாவட்டத்தில் 83 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சையை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் பரீட்சைக்குப் பயன்படுத்தப்படும் நானாவித காகிதாதிகளும் எடுத்து வரப்பட்டுள்ளன.

நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சைக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து இந்த முறை பத்தாயிரம் பேர் தோற்றவுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் யாழ்ப்பாணம் i, யாழ்ப்பாணம் ii என இரண்டு அலகுகளாகப் பிரிக்கப்பட்டு யாழ். i பிரிவில் 41 பரீட்சை நிலையங்களும், யாழ். ii பிரிவில் 42 பரீட்சை நிலையங்களும், இரண்டு இணைப்பு நிலையங்களும் ஒரு பிராந்திய ஒன்று சேர்ப்பு நிலையமும் நிறுவப்பட்டுள்ளன.

வடமராட்சி கிழக்கு பகுதியைச் சேர்ந்த செம்பியன்பற்று, தாளையடி, உடுத்துறை பகுதி மாணவர்களுக்கான பரீட்சை நிலையம் - பளை மத்திய கல்லூரியில் நிறுவப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் இவர்களுக்கான பரீட்சை நிலையங்கள் பருத்தித்துறையில் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்—

யாழ். மாவட்டத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான அவசர கலந்துரையால் இன்று காலை 10 மணிக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் தலைவர் எம்.கே.சிவசுப்பிர மணியம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் குடாநாட்டின் தற்போதைய நிலவரங்கள் தொடர்பாக ஆராயப்படவிருப்பதால் சகல அரச சார்பற்ற நிறுவனங்களின் பிதிநிதிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுள்ளது.

## ஆன்மீக சொற்பொழிவு

வடமராட்சி—

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக் கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில் நாளை காலை 10 மணி பூசை முடிவுற்றதும் "சமயமும் சமூகமும்" என்ற தலைப்பில் ஆசிரியர் க.தர்மதேவர் சொற்பொழிவாற்றுவார்.

## அடிப்படை வசதிகளற்ற நிலையில் கொடிகாமம் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு

தென்மராட்சி—

கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு தற்போது சிறிய அறை ஒன்றிலேயே இயங்கி வருவதால் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

சுமார் 28 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய பரந்த பிரதேசத்துக்குரிய ஒரேயொரு வைத்தியசாலையாக இயங்கிவரும் கொடிகாமம் வைத்தியசாலைக்குத் தினமும் ஏராளமான மக்கள் சிகிச்சை பெறுவதற்காக வருகின்றனர்.

எனினும், இந்த வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு அடிப்படை வசதிகள் எதுவுமற்ற சிறிய அறை ஒன்றிலேயே தற்காலிகமாக இயங்கி வருகிறது.

எனவே, இங்கு சிகிச்சை பெற வரும் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கின்றனர். ஆகவே, இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து அந்தப் பகுதி மக்கள் எந்தவித சிரமம் இன்றிச் சிகிச்சை பெறக்கூடியவாறான வெளிநோயாளர் பிரிவை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.



மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்துக்கு சுவிஸ் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் அமைத்துக்கொடுத்த புதிய கட்டடத் திறப்பு விழாவின்போது - இந்த நிறுவனத்தின் யாழ். வலய பணிப்பாளர் றுடோல்ப் பன்கஜர் மற்றும் வலயக் கல்வி அலுவலக திட்டப் பணிப்பாளர் வீரசிங்கம், வித்தியாலய அதிபர் கே.கதிர்காமசேகரம், பொறியியலாளர் எஸ். குகநாதன் ஆகியோர் மாணவர்களால் வரவேற்கப்படும் காட்சி. (29)

## தனிச் சிங்கள மொழியிலான நேர்முக தேர்வு கடிதங்கள்

யாழ்ப்பாணம்—

இலங்கை போக்குவரத்துசபை நடத்துனர், சாரதி போன்ற பதவிகளுக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் - தனிச் சிங்கள மொழி மூலம் அனுப்பப்பட்டுள்ளதால் விண்ணப்பதாரர் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இலங்கை போக்குவரத்து சபையால் கோரப்பட்ட பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் யாழ்ப்பாணத்திலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு தனிச் சிங்கள மொழியில் அனுப்பப்பட்டு இருப்பதால் சிங்கள மொழியில் எழுதப்பட்ட விடயங்களைப் புரிந்து கொள்வதற்கு உரியவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தமிழ்பேசும் மக்களே வாழ்கிற போதும் அரசு தனிச் சிங்கள மொழியில் கடிதம் அனுப்புவதானது தமிழ் மொழியை புறக்கணித்து வருவதையே புலப்படுத்துகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# வலிந்த தாக்குதலுக்கு தயாராகும் இராணுவம்



போரும், போர் நிறுத்தமும் நடைமுறையில் உள்ள ஒரு மரணப் பொறியில் இலங்கை உள்ளது. துணைக்குழுக்களை வைத்து நிழற்போரை நடத்தும் சிங்கள தேசம் - திரைமறைவில் ஒரு வலிமையான தாக்குதலுக்கும் தன்னை தயார்படுத்திக் கொண்டிருக்கிறது.

ஒரு புறம் கள முனைகளைத் தெரிவு செய்து கொண்டு தனது படைகளையும், படைக்கருவிகளையும் நகர்த்தியபடி. மறுபுறம் பேரழிவை ஏற்படுத்தக் கூடிய ஆயுதக் கொள்வனவிலும் மிகத் தீவிரமாக இறங்கியுள்ளது

சிங்கள அரசின் தற்போதைய இலக்குகள் இரண்டு.

1. நாகர்கோவில் கிளாலி ஊடாக நகர்ந்து ஆனையிறவைக் கைப்பற்றுதல் (மீண்டும் ஒரு தீச்சுவாலை). இதன் முன்னேற்பாடாகவே கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். குடாநாட்டில் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தி மக்களை வீடுகளுக்குள் முடக்கிவிட்டு - இரகசியமாக துருப்புக்களையும், ஆயுத தளபாடங்களையும் நாகர்கோவில் மணற்காடு முன்னரங்க நிலையை நோக்கி நகர்த்தியுள்ளது. ஆனையிறவைக் கைப்பற்றுவதன் மூலம் இராணுவச் சமநிலையில் மேலோங்கவும், புலிகளை பின்னோக்கி நகர்த்தி, யாழ்.குடாநாட்டைத் தக்கவைக்கவும், யாழ். குடாநாட்டுக்குள் புலிகளின் ஊடுருவலைத் தடுக்கவும், வன்னியை ஒரு நெருக்கடிக்குள் தள்ளவும் முயற்சிக்கின்றது. இவை யாவும் நடந்தால் பொதுத் தேர்தல் நடத்துவது தான் திட்டம்.

2) திருமலைத் துறைமுகத்தை சுற்றியுள்ள மூதூர் பிரதேசம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருக்கிறது. புலிகளின் நிலைகள் துறைமுகத்தின் எதிர்ப்புறம் உள்ள மூதூர் பிரதேசத்தின் சம்பூர்,இறால்குழி போன்றவற்றில் மிகப்பலமாக இருக்கின்றன. போர் தொடங்குமாயின் விடுதலைப் புலிகளின் நீண்டதூர பீரங்கித் தாக்குதல் மூலமும், அதிரடித் தாக்குதல் மூலமும் இலகுவாக துறைமுகத்தை செயலிழக்கச் செய்ய முடியும்.

புலிகளை இந்தப் பகுதிகளில் இருந்து அகற்றுவதன் மூலம் உலகின் ஐந்தாவது பெரிய இயற்கைத் துறைமுகத்தை தக்க வைக்கவும், அதன் மூலம் யாழ்.குடாநாட்டை தக்கவைப்பதன் ஊடாக இராணுவப் பேரழிவை தடுக்கவும், வடக்கையும் கிழக்கையும் பிரித்தாளவும் முடியும்.



எனவே தான் திருமலையை குறி வைத்து இனக் கலவரங்களை ஏற்படுத்துவதுடன் விமானத்தாக்குதல், கடற்படை பீரங்கித் தாக்குதல், இராணுவத்தின் பீரங்கித்தாக்குதல் என விடுதலை புலிகளின் பாதுகாப்பு நிலைகளை பலவீனப்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளது சிங்கள அரசு.

இதன் அடுத்த கட்டமாக சம்பூர், இறால்குழி பகுதிகளில் உள்ள புலிகளின் பாதுகாப்பு நிலைகள் மீது கருணா குழு என்ற போர்வையில் இராணுவம் தொடர்ச்சியாக தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றது.

இதன் மூலம் புலிகளின் நிலைகளைப் பலவீனப்படுத்துதல், வெலிக்கந்தவில் மரண அடிவாங்கிய கருணா குழுவின் பலம் எனும் மாயையை மக்கள் மத்தியிலும், வெளியுலகிலும் மீளக்கட்டி எழுப்புதல் ஆகிய இரு நன்மைகளை எட்ட முனைகின்றது அரசு.

அறுபதாயிரம் துருப்புக்களுடனும், நூறு கனரக ஆயுதத்தாங்கிகளுடனும் சரமாரியான விமானக் குண்டுவீச்சுக்களின் மத்தியில் ஒரு குறித்த அச்சில் முன்னேறி, யாழ்.குடாநாட்டை கைப்பற்றும் திட்டத்தை முன்வைத்தார் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி.

அந்தத் திட்டத்தையே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 1995 ஆம் ஆண்டு கையில் எடுத்தார். ஆனால் புலிகளின் இராணுவ பலம், அரசியல் பலம், யுத்த தந்திரம் என்பவற்றை அறிய தவறியிருந்தார். அதன் பலனை அவர் 1999 ஆம் ஆண்டில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் தொலைக்காட்சியில் கண்ணீர்விட்டு அழுதபோது உணர்ந்திருப்பார்.

அதேபோன்றதொரு திட்டமே இப்போது மகிந்தவின் கைவசமுள்ளது. பெருந்தொகை துருப்புக்களையும், கனரக டாங்கிகளையும், தொன் கணக்கில் வெடிபொருட்களையும் பயன்படுத்தி - நாகர்கோவில், எழுதுமட்டுவாள், முகமாலை அச்சில் முன்னேறி ஆனையிறவை கைப்பற்றுவதே திட்டமாகும்.

இதன் முன்னேற்பாடாக முக்கியமாகத் தெரிவு செய்யப்பட்ட ஆயுதக் கொள்வனவில் இறங்கியுள்ளது அரசு, ஆயுதப்பட்டியலானது மிகப் பேரழிவை ஏற்படுத்தக் கூடிய பல்குழல் எறிகணைகள், கனரக டாங்கிகளுக்குரிய எறிகணைகள் என்பவற்றுடன் லேசர் மூலம் வழி நடத்தப்படும் குண்டுகள், லேசர் மூலம் வழிநடத்தப்படும் கிளஸ்ரர் குண்டுகள், டம் (DUMB) குண்டுகள், பாரிய பதுங்கு குழிகளை ஊடுருவும் விமானக் குண்டுகளும் முக்கிய இடத்தை பிடித்துள்ளன.

பொதுவாக 2 ஆயிரத்து 500 அடிகளுக்குக் கீழே தாழப்பறக்காமல் எந்த ஒரு விமானத்தாலும் குறித்த இலக்கை நோக்கி குண்டுகளை வீச முடியாது. ஆனால் லேசர் மூலம் வழி நடத்தப்படும் குண்டுகள் இதற்கு விதிவிலக்கு. அதிக தொலைவிலிருந்தும் இலக்கை தாக்கியழிக்கக் கூடியவை.

அதேபோன்றதே கிளஸ்ரர் குண்டுகள். அதாவது - அவை இலக்கின்றி ஒரு பிரதேசத்தை முற்றாக அழிக்க வீசப்படுபவை. புலிகளின் காப்பரண்களும், பதுங்கு குழிகளும் மிகவும் பலம் வாய்ந்தவை. எனவே, பதுங்கு குழிகளை ஊடுருவும் குண்டுகளும் கொள்வனவு செய்யப் படுகின்றன. டம் குண்டுகள் அதிகளவு வெடி பொருட்களைக் கொண்ட பாரிய குண்டுகளாகும் (2000 Kg அளவானவை). ஒரு சிறிய பிரதேசத்தை முற்றாக அழிப்பதற்கு பயன்படுத்தப்படுபவை.

விடுதலைப் புலிகளிடம் உள்ளதாகக் கருதப்படும் சாம் - 7 (SAM-7), இக்லா (Igla - SA-16), ஸ்ரிங்கர் (FIM -92 Stinger) ஏவுகணைகள் 5-7 கிலோ மீற்றர் தூர வீச்சுடையவை. அவற்றுடன் 5 கிலோ மீற்றர் தூர வீச்சுடைய ஒலிகன் வகை விமான எதிர்ப்பு பீரங்கிகளும் அதிகளவில் புலிகளிடம் உண்டு. எனவே விமானப்படையால் 2 ஆயிரத்து 500 அடிகளுக்குத் தாழப்பறந்து குண்டுவீசுவது என்பது முடியாத காரியம். ஏற்கனவே பல விமானங்களைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படையிடம் இழந்துள்ளது அரசு. அதனால் தான் இந்த முறை அதிக அழிவைத்தரும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய முனைந்துள்ளது.

லேசர் மூலம் வழிநடத்தப்படும் குண்டுகள், விமானத்தில் இருந்து செலுத்தப்படும் லேசர் கதிர்கள் இலக்கில் தெறிப்படைந்து வரும் சமிக்ஞையை பயன்படுத்தியே இலக்கை தாக்குபவை. ஆனால், தெறித்து வரும் கதிர்கள் மரங்கள், முகில்கள், தூசுப்படைகள் போன்றவற்றால் சிதறலடைந்தால் குண்டின் இலக்குத் தவறிவிடும். அடர்ந்த காடும், உருமறைக்கப்பட்ட அரண்களையும் கொண்ட புலிகளின் இலக்குகளை இதன் மூலம் தாக்குவது மிகக் கடினம்.

நகர்ப்புறச் சமரில் மிகத் திறம்பட செயற்படும் மக்கள் படையையும், புலிகளையும் அறியமுடியாத அவலத்தில் உள்ள சிங்களப்படைகள் இந்த நவீன ஆயுதங்கள் மூலம் சாதிக்கப் போவது என்ன என்பது தான் முக்கிய கேள்வி. அதாவது சந்திரிகா ஏறிவீழ்ந்த அதே முடக்குதிரையில் மகிந்த புதிய சாட்டையுடன் ஏறப்போகின்றார்.

சந்திரிகா ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் மகிந்த மீன் பிடித்துறை அமைச்சராக இருந்தார். சந்திரிகாவோ பாதுகாப்பு உட்பட எந்த ஒரு முக்கிய கூட்டத்துக்கும் மகிந்தவை அழைத்துச் சென்றதில்லை. மகிந்தவுக்கும் எதையும் அறியும் ஆவல் அப்போது இருந்ததில்லை. இப்போது தனது உதவியாளர்களின் உதவியுடன் அறிவியல் வெற்றிடத்தை நிரப்ப முனைகின்றார்.

இது ஜெனிவாப் பேச்சுக்கு முன் நிகழ்ந்த பயிற்சிப் பட்டறை . எனவே தான் மீண்டும் ஒரு தீச்சுவாலைக்குள் கையை விட துடிக்கின்றார். தீச்சுவாலையில் நிகழ்ந்தது என்ன?

2001 ஆம் ஆண்டு சித்திரை மாதத்தில் இராணுவம் புதிதாக கொள்வனவு செய்த ஆயுதங்களுடன் நான்கு மாதகால கடும் பயிற்சி, ஒத்திகையின் பின் ஆனையிறவை மீட்கும் தீச்சுவாலை (Agni kheela) நடவடிக்கைக்கு தயாரானது. தனது முன்னணித் தளபதிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் அன்ரன் விஜயரத்னவின் வழிகாட்டலில் இராணுவத்தின் முன்னணி படைப்பிரிவுகளான 52,53,55 படைப்பிரிவுகளை சேர்ந்த (Division) 12 ஆயிரம்துருப்புகள் அதிகாலை 1.48 மணிக்கு கடும் எறிகணை வீச்சுக்கள் , பல்குழல் எறிகணை வீச்சுக்ளளளகள், விமானத்தாக்கு தல்களுடன் நாகர்கோவில், கிளாலி, முகமாலைப் பகுதிகளில் இருந்து முன்னேறத் தொடங்கின.

இதனை எதிர்பார்த்திருந்த புலிகளின் படையணிகளும், புலிகளின் விசேட படையணிகளான சாள்ஸ் அன்ரனி, ஜெயந்தன் அணிகளும் கடும் தாக்குதல்களை தொடுத்தன. 78 மணிநேர கடும் சமரின் பின் அரச படைகள் முன்னேற முடியாது தமது பழைய நிலைகளுக்குத் திரும்பின.

வியட்னாம் போரின் பின் பல வருடங்களாக அந்த நாடு வெளிநாடுகளில் இருந்து தான் மரங்களை இறக்குமதி செய்தது. ஏனெனில் வியட்னாம் காட்டு மரங்கள் அரிவதற்கு வாள் போட முடியாத அளவுக்கு உலோக சன்னங்களால் நிறைந்திருந்தன. இதன் மூலம் அங்கு நடந்த போரின் உக்கிரம் புரிந்திருக்கும்.

அதேபோலவே ஆயிரக்கணக்கான பனை மரங்கள் வட்டுக்கள் இல்லாமலும், எரிந்து உருக்குலைந்த பற்றைகளுமாய் களத்தின் உக்கிரத்தை தீச்சுவாலை இராணுவ நடவடிக்கை இடம் பெற்ற இடத்தை A - 9 பாதையால் பயணிக்கும் போது பார்க்கலாம்.

இராணுவத்தரப்பு தகவலின் படி இராணுவத்தின் முன்னணிப் படைகளில் 11 அதிகாரிகள் உட்பட 400 பேர் உயிரிழந்தனர். 500 படையினர் அங்கவீனர் ஆகினர், ஆயிரத்து 450 பேர் படுகாயம் அடைந்தனர். அதாவது ஆயிரத்து 800 படையினர் மீண்டும் போர் முனைக்கு செல்லமுடியாமல் இழக்கப்பட்டார்கள். ஆனால் இழப்புக்கள் இதைவிட அதிகமாகும். புலிகள் தரப்பில் 141 பேர் வீரச்சாவடைந்தனர். இவை 78 மணிநேர இழப்புக்கள்.

இராணுவத்தின் இந்த இழப்பு அதன் ஒரு பிரிகேட்டை (Brigade) விட அதிகம். சாதாரணமாக இராணுவத்தில் ஒரு பிரிகேட் 5 ஆயிரம் படை வீரர்களைக் கொண்டதாக இருக்கும். ஆனால், இலங்கை இராணுவம் அடிக்கு மேல் அடி வாங்கி மெலிந்து, தப்பி ஓடியது போக ஒரு பிரிகேட்டில் ஆயிரத்து 350 படை வீரர்களை கொண்டதாகவே இருக்கிறது.

இதன் பின்னர் தென்பகுதி இராணுவ ஆய்வாளர்களின் கருத்து இதுதான் 'நவீன ஆயுதங்கள் மூலம் புலிகளை வெல்ல முடியாது.'

ஆனால், இப்போது இராணுவத் தளபதி என்ன சொல்கிறார். 7ஆயிரம் புலிகள் தான் இருக்கின்றார்களாம். இராணுவத்தில் 1 லட்சத்து 20 ஆயிரம் வீரர்கள் உள்ளார்களாம். மீண்டும் மீண்டும் தவறான கணிப்பீட்டுகளுடன் போருக்கு போகப் போகிறது சிங்கள இராணுவம், மக்கள் படையின் தாக்குதலால் சிதறடிக்கப்படும் தனது இராணுவ பலத்தை தளபதி கருத்தில் எடுக்கவில்லை.

கிளைமோருக்குப் பயந்து சைக்கிளில் பயணிக்கும் கடற்படை இவர் கண்ணுக்குத் தெரியவில்லை. மிகவும் நலிவடைந்த கடற்படையும், அதனால் பாதுகாக்கப்படும் பலவீனமான வழங்கல் பாதையும் புரியவில்லை. கடற்புலிகளின் பலமும், மக்கள் படையின் பயிற்சிப் பட்டறைகளும் இவருக்குப் புரியவில்லை.

15 ஆயிரம் படைகள் ஆனையிறவில் காவல் இருக்க, 25ஆயிரம் படைகள் யாழ். குடாவில் இருக்க ஆயிரத்து 200 புலிகள் குடாரப்பில் தரை இறங்கி இத்தாவிலில் ஒரு கிலோ மீற்றர் பாதையை ஊடறுத்து ஆனையிறவை வீழ்த்துவார்கள் என்று சிங்களமும் அதன் பாதுகாப்புக்கு ஆலோசனைகள் வழங்கிய சில சர்வதேச நாடுகளும் கனவிலும் நினைக்கவில்லை அன்று.

எங்கே களம் திறக்கப்போகிறோம் என்பது தலைவருக்கு மட்டுமே தெரியும், புலிகளின் பலம் என்ன என்பது புலிகளுக்கே தெரியும். தனது பலவீனத்தையும், புலிகளின் பலத்தையும் கருத்தில் எடுக்காது போர்முரசு கொட்டும் சிங்களப்படைகளின் போரிடும் வலு முற்றாக அழியப் போவது மட்டும் உண்மை.

ஆங்கிலத்தில் ஓர் வாக்கியம் உண்டு "கவனமாக இரு. இல்லையேல் அதற்கு உரிய விலையை கொடு" (Pay Attention or pay the price). தனது தவறான கணிப்புக்குரிய விலையை சிங்கள தேசம் விரைவில் கொடுக்கப்போகிறது.

வேல்சிலிருந்து ஆரூஸ்
நன்றி தமிழ்நாதம்

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!
நம்புஆற்றா ராகி நயம்இல செய்வார்க்கும்
பண்புஆற்றா ராதல் கடை.

- திருக்குறள்.

## நமது நோக்கு

# தளரும் 'பிடி'

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளில் சர்வதேச சமூகத்தின் 'செல்வாக்கு' தளர்வடையத் தொடங்குவதைக் காணமுடிகிறது.

விடுதலைப் புலிகளுக்கு அழுத்தம் கொடுப்பதாக நினைத்துக்கொண்டு - சர்வதேச சமூகம் 'அவலை நினைத்து உரலை இடித்த' கதை போன்ற காரியத்தில் இறங்கியிருக்கிறது.

அதாவது, புலிகளை வெளிநாடுகளில் தடை செய்தால் அவர்கள் 'வழிக்கு' வருவார்கள் என்ற நினைப்பில்தான் பல நாடுகள் இந்தக் காரியத்தில் இறங்கியிருக்கின்றன.

ஏற்கனவே இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து வரிசையில் இப்போது கனடாவும் இணைந்திருப்பது போதாதென்று ஐரோப்பிய யூனியனையும் இந்தக் கூட்டணிக்குள் கொண்டுவர அமெரிக்கா முற்படுகிறது.

ஐரோப்பிய யூனியனும்கூட புலிகளைத் தடை செய்வதற்கான முயற்சியில் தீவிரம் காட்டுகிறது. அது நடந்தாலும் ஆச்சரியமல்ல.

ஆனால், சர்வதேச சமூகம் இலங்கை பிரச்சினையில் ஏதோ எல்லாவற்றையும் கரைத்துக் குடித்துவிட்டு இறங்கியது என்று கற்பனை செய்துகொண்டிருந்தவர்களுக்கு - புலிகளை தடைபோட்டு, அழுத்தம் கொடுத்து பணியவைக்க அவர்கள் எடுக்கும் முயற்சி வியப்பைத்தான் தோற்றுவித்திருக்கிறது.

2002ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் இயக்கம் சர்வதேச சமூகத்தின் கருத்துக்கு மதிப்புக் கொடுத்து போர் நிறுத்த உடன்பாட்டில் கைச்சாத்திட்டது. ஆனால், கடந்த 4 ஆண்டு காலத்தில் போர்நிறுத்த உடன்பாட்டின் மூலம் தமிழ் மக்களும், புலிகளும் இழப்புகளைச் சந்தித்ததைவிட வேறெதையுமே சாதிக்கமுடியவில்லை.

சர்வதேச சமூகம் தமிழ் மக்கள் நலனில் அக்கறையும், ஆர்வமும் கொண்டிருந்தால் இந்த நிலை ஏற்படவிடாமல் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்திருக்கும்.

ஆனால், அப்படி எதுவும் நடக்கவில்லை. சர்வதேசத்தின் அக்கறையற்ற போக்கால் புத்துயிர் பெற்ற இலங்கை அரசு - புலிகள் மீது மேற்குலகம் விதிக்கும் தடைகளால் மேலும் மேலும் வேகம் கொண்டு தமிழின அழிப்பில் தீவிரம் காட்டத் தொடங்கியிருக்கிறது.

சண்டைக்காலத்தில் விடுதலைப் புலிகளைத் தடை செய்ய எத்தனிக்காத நாடுகளெல்லாம், சமாதான காலத்தில் இந்தக் காரியத்தில் இறங்கியிருக்கின்றன. இது புலிகளை அழுத்திப்பிடிக்கும் ஒரு வழியென இவர்கள் கருதியதால் நடக்கும் காரியமாக இருக்கலாம்.

ஆனால், உண்மை நிலைமை அப்படியிருக்கப்போவதில்லை. சர்வதேச சமூகத்தின் தடைகளால் எதிர்மறையான விளைவுகளே ஏற்படும் என்று புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் எச்சரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

புலிகளைத் தடைசெய்வதாக நினைத்துக்கொண்டு இலங்கை பிரச்சினையின் மீதான பிடியை தடை விதிக்கும் நாடுகள் இழந்துவருகின்றன. இதனால் புலிகள் மீதான சர்வதேசத்தின் பிடி தளர்ந்துபோய் அவர்கள் தமது வழியில் செயற்படும் நிலை உருவாகும்.


சர்வதேசத்தின் முன் தாம் செய்த உடன்பாட்டை மதித்துவந்த புலிகள் இனி அப்படிச் செய்யவேண்டிய தேவை இல்லையென்ற நிலை ஏற்படும். அதைவிட ஐரோப்பிய யூனியன் புலிகளைத் தடை செய்தால் - போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் செயற்பாடும் ஸ்தம்பிதமடையலாம்.

ஏனெனில், நோர்டிக் நாடுகள் இதில் அங்கம் வகிக்கின்றன. இந்த நாடுகள் கண்காணிப்பிலிருந்து விலகினால், நோர்வே மட்டும் தனது கண்காணிப்பில் ஈடுபடும். இது சிங்கள பேரினவாதத்துக்குப் பிடிக்காது.

எனவே, இன்று சர்வதேச சமூகம் இலங்கை பிரச்சினைகளை அமைதி வழி மூலம் தீர்த்துவைக்கும் காரியத்திலிருந்து விலகி, யுத்தத்தை நோக்கிப் புலிகளை தள்ளுகின்றன என்பதே உண்மை.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# நவீன ரக ஆயுதக் கொள்வனவுகளில் கடற்படை ஈடுபடவேண்டிய அவசியம்!





கொழும்பு —

வெற்றிலைக்கேணிப் பகுதியில் கடந்த வாரம் நடைபெற்ற கடற்சமரில் 700 துருப்புகள் தப்பியதையடுத்து நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் கடற்படை தீவிரம் காட்டுவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இஸ்ரேலிய தயாரிப்பான டோரா அதிவேகத் தாக்குதல் படகுகள்தான் கடற்படையின் இரத்த நாளமாகும். இவையே கடற்பிரதேசங்களை எந்த நேரமும் கண்காணித்து வருகின்றன.

இதுதவிர எம்.வி.பேர்ள்குரூஸ் போன்ற பாரிய கப்பல்களில் படையினரை ஏற்றிச் செல்ல பாதுகாப்பாகவும் இந்தப் படகுகள் பயன்படுத்தப்படுகின்றன.

சயுர போன்ற பாரிய கப்பல்கள் ஆழ்கடல் நடவடிக்கைக்கு பயன்படுத்தப்படுகிறது. கடற்படையிடம் வலுவான டோரா தாக்குதல் படகுகள் உள்ளன. ஆனால், டோராப் படகுகள் பழைய தயாரிப்பாகவும், குறைந்தபட்ச ஆயுதங்களைக் கொண்டு செல்லக்கூடியதுமாக இருக்கின்றன.

கடற்புலிகளின் படகுகளில் ஆயுதங்கள் இருந்துபோதும் கடலில் இருதரப்புக்கும் சிறிய அளவிலோ, பெரிய அளவிலோ மோதல் நடந்தால் கடற்படைக்கே பாரிய சேதம் ஏற்படுகிறது.

டோராப் படகுகளில் 23எம்.எம் பீரங்கிகள் தற்போது பயன்படுத்தப்படுகின்றன. இது 2000மீற்றர் தூரம் வரை சென்று இலக்கை அடையக்கூடியது. தமிழீழ விடுதலைப்புலிகளும் கூட இதே வகையான ஆயுதங்களை தமது கடற்கலங்களில் பொருத்தியுள்ளனர்.

23எம்.எம், 25எம்.எம் மற்றும் 30 எம்.எம். பீரங்கி பொருத்துவதற்கான சாத்தியங்களையும், டோராப் படகில் அனுமதிக்க வேண்டும். மேலும், இலகு மற்றும் கனரக ஆயுதங்களையும் அதில் பொருத்தவேண்டும். மேலும், சுப்பர் டோராப் படகுகளில் ஏவுகணைகளைப் பொருத்தக்கூடியதாகவும் அமைக்கலாம்.

1997ஆம் ஆண்டு கடற்படைப் படகில் 23 எம்.எம் பீரங்கிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதற்கு முன்னதாக கடற்படையின் டோராப் படகில் 20 எம்.எம் பீரங்கிகள் பொருத்தப்பட்டிருந்தன. அது 1,400 மீற்றர் வரை சென்று தாக்கக்கூடியது.

1997ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் 23 எம்.எம் பீரங்கிளைப் பொருத்தியதைத் தொடர்ந்து கடற்படையினரும் அதைப் பொருத்தினர்.

இருப்பினும் 23 எம்.எம் பீரங்கிகள் போதுமானவை அல்ல என்பதால் அதிக தூரம் சென்று தாக்கக் கூடிய ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய கடற்படை தளபதி பரிந்துரைத்தார்.

ஆனால், அவர் ஓய்வுபெறுவதற்கு சிறிது காலத்துக்கு முன்னர் அவரது பரிந்துரைகளை பின்னாளில் கடற்படைத் தளபதியாகப் பொறுப்பேற்ற தயா சந்தகிரி மறு ஆய்வு செய்தார்.

முப்படைத்தளபதியாக தற்போதும் தயா சந்தகிரி உள்ளார். கடற்படைக்கு 25ஆண்டுகள் பழமையான 30எம்.எம் பீரங்கிகளை இங்கிலாந்து நிறுவனத்திடமிருந்து பெறுவதற்கான முன்தொகை கொடுத்து பெற்றது குறித்து அவர் மீது விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட அனுப்பிய அறிக்கையின் அடிப்படையில் இந்த விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதையடுத்து கடந்த மார்ச் மாதம் இது தொடர்பான விசாரணைக்கு உத்தரவிட்டிருந்தார். இந்த விசாரணை ஆணையக்குழுவின் தலைவராக நீதிபதி நிமால் காமினி அமரதுங்க நியமிக்கப்பட்டார். இந்த அறிக்கை எதிர்வரும் ஜூலை மாதம் தாக்கல் செய்யப்படக்கூடும்.

டோராப் படகு ஆயுதங்களின் தரம் குறித்த சர்ச்சைகளால் தற்போது 23 எம்.எம் பீரங்கிகளே பாவிக்கப்பட்டு வருகின்றன.

அரச படைகளை குறிப்பாக கடற்படையினரை தற்போது தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்கி வருகின்றனர்.

30 எம்.எம் பீரங்கிகளைக் கொள்வனவு செய்யாத வரையில் கடற்படைக்கு பாரிய இழப்புகள்தான் ஏற்படும் என்று இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சாலை கடற்பிரதேசத்தில் கடந்த வாரம் இதுவே நடந்தது.

சாலை கடற்பிரதேசத்தில் நடந்த மோதலின் போது கடற்படையின் டோராப் படகில் 30 எம்.எம் பீரங்கிகள் இருந்திருந்தால் அந்தச் சமர் 30 நிமிடத்துக்குள்ளாகவே முடிவடைந்திருக்கும் . விடுதலைப் புலிகளுக்கும் பாரிய சேதம் ஏற்பட்டிருக்கும்.

ஒரு தனிநபரின் செயற்பாட்டால் இந்த நாட்டினது பாதுகாப்பு எப்படி சீர்குலைந்து உள்ளது என்பதை இது தெளிவாகக் காட்டுகிறது. இந்தப் படிப்பினைகளுக்குப் பின்னரும் நாம் சரியான ஆயுதங்களைக் கொள்வனவு செய்யாவிட்டால் அது கடற்படைக்கு இழப்பை ஏற்படுத்துவதாகவே அமையும்.

700 படையினரை தமிழீழ விடுதலைப் புலிகள் அழித்திருந்தால் அதற்கான பொறுப்பாளர் யார்? ஆயுதக் கொள்வனவில் ஏற்படுகிற தாமதங்களால் மூத்த கடற்படை அதிகாரிகள் கடும் விரக்தியில் உள்ளனர். கடற்படையினரது தார்மீக மரியாதை சிதைக்கப்படுகிறது.

இதனிடையே கடந்த 2000ஆம் ஆண்டு முதல் 2005ஆம் ஆண்டு வரை இராணுவத்துக்கான ஆயுதங்களைக் கொள்வனவு செய்தமை குறித்த விசாரணைக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

இந்த விசாரணை ஆணையக்குழுவுக்கு நீதிபதி சிரானி திலகவர்த்தன தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். நீதிபதிகள் நிசங்க உதலகம மற்றும் நிமல் ஈ திசநாயக்க ஆகியோர் விசாரணைக்குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஓய்வுபெற்ற அரச அதிகாரி எட்மண்ட் ஜயசூர்ய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த ஆணைக்குழுவின் அலுவலகம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச நினைவு மண்டபத்தில் அறை எண் 9 இல் இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


மேலும் 30 எம்.எம் பீரங்கிகளைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் கடற்படைத்தளபதி வசந்த கரன்னகொட ஈடுபட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த 30 எம்.எம்.பீரங்கிகளானது 3 ஆயிரம் மீற்றர் வரை சென்று இலக்கைத் தாக்கக் கூடியது. மிகவும் பாதுகாப்பான நிலையிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் படகுகள் மீது கடற்படையினரால் தாக்குதல் நடத்த முடியும் என்று அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அரசு போருக்கு சென்றால் பெரும் ஆபத்து ஏற்படும்!

## ரணில் எச்சரிக்கை



கொழும்பு—

இலங்கையில் மீண்டும் அரசாங்கம் போர் ஒன்றுக்குச் செல்லுமானால் - அது இலங்கையை பாரிய ஆபத்துக்குள் கொண்டு செல்லும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுவிட்டு நாடு திரும்பியுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று செய்தியாளர் மத்தியில் கருத்து தெரிவிக்கையில்–

எதிர்வரும் 30 ஆம் திகதி டோக்கியோவில் நடைபெற இருக்கும் கூட்டத்தில் இணைத்தலைமை நாடுகள் இலங்கை தொடர்பாக பல தீர்மானங்களை எடுக்கவுள்ளன.

யுத்தநிறுத்தத்துக்கு எதிராக நீதிமன்றம் சென்றோ அல்லது அதனை செயலிழக்க வைக்க, மீற அரசு முனையுமானால் - சர்வதேசத்தின் மிகவும் கடுமையான எதிர்ப்பை பெற்றுக்கொள்ளநேரிடும்.

எனவே, சமாதான முன்னெடுப்புக்கள் தற்போது இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டு யுத்தம் ஏற்படும் அபாயம் உள்ளது.

தொடர்ந்து சமாதானம் இலங்கையில் நிலவ வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

## பெண்கள் விடுதிக்குள் அத்துமீறிய படையினர்

யாழ்ப்பாணம்—

யாழ்.பல்கலைக்கழக பெண்கள் விடுதிக்குள் படையினர் அத்துமீறி நுழைந்து சோதனையிட்டதால் மாணவிகள் அச்சத்தால் அங்கிருந்து வெளியேறினர்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் வெளிமாவட்ட மாணவிகள் தங்கியிருந்த குமாரசாமி பெண்கள் விடுதி - நேற்று அதிகாலை அறிவிப்பின்றி திடீரென் படையினரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், அங்கிருந்தவர்களையும் அச்சுறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், பெண்கள் விடுதியில் இருந்த அனைத்து மாணவிகளையும் தீவிர விசாரணைக்குட்படுத்தியதாகவும் கூறப்படுகிறது. படையினரின் இந்தச் செயற்பாட்டால் அச்சமடைந்த மாணவிகள் விடுதியைவிட்டு நேற்றைய தினமே வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## குடாநாட்டில் படையினர் பரவலான தேடுதல்கள்

யாழ்ப்பாணம்—

யாழ்.குடாநாட்டில் நேற்று பல்வேறு இடங்களில் படையினரால் சுற்றிவளைப்புத் தேடுதல்கள் நடத்தப்பட்டன. எனினும், எவரும் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்படவில்லை எனத் தெரியவருகிறது.

யாழ்.பருத்தித்துறை வீதி, சங்கிலியன்வீதி,முத்திரைச்சந்தி, கொக்குவில் சம்பியன்லேன், கலட்டிச்சந்தி போன்ற பகுதிகள் படையினரால் நேற்று சுற்றிவளைத்து தேடுதல் நடத்தப்பட்டது.

சுற்றிவளைப்புத் தேடுதலில் ஈடுபட்ட படையினர் போக்குவரத்தில் ஈடுபட்ட வாகனங்களை நீண்டநேரமாக நிறுத்தி சோதனை மேற்கொண்டதால் போக்குவரத்தில் ஈடுபட்ட மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

## தாக்குதல் நடக்கப்போவதாக அநுராதபுரத்தில் வதந்தி!

கொழும்பு—

அநுராதபுரம் நகர்ப்பகுதியில் அமைந்துள்ள பாடசாலைமீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தப்போவதாக வெளியான தகவலையடுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நகரிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றின் தொலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்திய ஒருவர்- பாடசாலையின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தவுள்ளனர் எனத் தெரிவித்ததையடுத்து பாடசாலையில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இது தொடர்பாக உடனடியாக பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து- படையினரும், பொலிஸாரும் அந்தப்பகுதியில் குவிக்கப்பட்டு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது.

## சிப்பாய் தற்கொலை

திருகோணமலை—

திருகோணமலை - புல்மோட்டை இராணுவ முகாமில் கடமையாற்றும் இராணுவச்சிப்பாய் ஒருவர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படுகாயமுற்ற சிப்பாய் புதன்கிழமை மாலை மரணமானார். இவர் திருமணமாகி இரண்டு மாதங்களே எனத் தெரிவிக்கப்படு கிறது.

## இரு சடலங்கள்...

மேற்படி சடலங்களை பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

## புலிகள்...

முடிவை அடுத்தே உறுதியான முடிவு எடுக்கப்படும். இதற்கு சிறிது காலம் எடுக்கும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடல்...

வல் எதனையும் வெளியிடமுடியாது எனத் தெரிவித்தார்.

இதேவேளை, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் கடல் கண்காணிப்பு தொடர்பாக வழங்கிய இருநிபந்தனைகளும் தொழில்நுட்பத்துடன் சம்மந்தப்பட்டவை என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இந்த இரண்டு நிபந்தனைகள் குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக தெரிவித்த அவர் அவற்றை ஊடகங்களுக்கு வெளியிடமுடியாயது எனத் தெரிவித்தார்.

## 20 உள்ளூராட்சி...

இலங்கையில் 337 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் வேட்பு மனுக்கள் ஏற்கனவே போட்டியின்றி தெரிவான 2 சபைகள் தவிர ஏனைய சபைகளுக்கான தேர்தல் மார்ச் 30 ஆம் திகதி நடத்த தீர்மானிக்கப்பட்டது. நீதிமன்ற நடவடிக்கை, பாதுகாப்புக் காரணங்களுக்காக வடக்கு - கிழக்கில் உள்ள 49 சபைகள் உட்பட 60 சபைகளுக்கான தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது.

இவற்றில் வடக்கிலுள்ள 33 சபைகளுக்கும், மட்டக்களப்பில் 9 சபைகளுக்குமான தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்று மட்டக்களப்பு- அம்பாறை மாவட்டத்திலுள்ள ஒரு மாநகரசபை உட்பட 9 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. 20 உள்ளூராட்சி சபைகளிலும் 11 இலட்சம்பேர் வாக்களிக்கத்தகுதி பெற்றுள்ளனர்.

## புலிகளை...

படுவதற்கு முன்னர், அமைச்சர்கள் மட்டத்தில் கூடி ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும்.

அதேவேளை, ஐரோப்பிய ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் 25 நாடுகளில் எந்தவொரு நாடு எதிர்ப்புத் தெரிவித்தாலும் இந்தத் தடையை நடைமுறைப்படுத்த முடியாது என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்ட தீர்மானம் சட்டவலுவற் றது என தெரியவருகிறது. ஐரோப்பிய நாடாளுமன்றத்தை பிரிட்டன், ஸ்லோவாக்கியா, ஸ்லோவேனியா, ஸ்பெயின் ஆகிய நான்கு நாடுகளே அங்கீகரித்துள்ளன.

ஐரோப்பிய ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் 25 நாடுகளில் நான்கு நாடுகளே அங்கீகரித்திருப்பதால் - ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் எதுவும் சட்டவலுவுடையதோ அல்லது அனைத்து நாடுகளினாலும் நடைமுறைப்படுத்தக் கூடியதோ அல்ல எனத் தெரியவருகிறது.

எனவே, புலிகள் மீதான தடை ஐரோப்பாவில் உடனடியாக அமுலுக்குவர வாய்ப்பில்லை என்றே ஐரோப்பியத் தகவல்கள் தெரிவித்தன.

## புலிகளின் சொத்துக்களை...

என்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும், பயங்கரவாதப் பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகளை இணைத்துக்கொள்வது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் தீவிரமாக ஆலோசித்துவருவது குறித்தும் அங்கீகரிப்பதாகவும் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற தீர்மானத்தின் 17 ஆவது சரத்தில் குறிப்பிடப் பட் டுள்ளது.

அனைத்துத் தமிழ் மக்களும் தமிழீழ விடுதலைப் புலிகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர் என்ற கூற்றை அங்கீகரிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளது.

அரசியல் தன்மைத்துவத்துக்கும், வடக்கு - கிழக்கில் மாற்று ஜனநாயகக் குரல்களுக்கும் விடுதலைப் புலிகள் இடமளிக்க வேண்டும் என்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தின் தீர்மானத்தின் 8 ஆவது சரத்து அழைப்பு விடுத்துள்ளது.

எனினும், இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளையும் ஐரோப்பிய ஒன்றிய தீர்மானம் கண்டித்துள்ளது. சமாதான முயற்சிகளைப் பாதிக்கின்ற தாக்குதல்களை இரு தரப்பினரும் நிறுத்தவேண்டும் என்றும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் ஊடகங்கள், தமிழ் அமைப்புக்கள் மீதான ஒடுக்கு முறைகளை வன்மையாகக் கண்டிப்பதாகவும் தெரிவித்துள்ளதுடன் - மயில்வாகனம் நிமலராஜன், தர்மரட்ணம் சிவராம், மற்றும் உதயன் செய்தித்தாளின் பணியாளர்கள் மீதான தாக்குதல்கள், கொலைகள் காத்திரமான முறையில் விசாரணை செய்யப்படவேண்டும்.

பல வருடங்களாக பெருமெடுப்பிலான பாதுகாப்புக்கள், செலவீனங்கள் இலங்கையின் சமூக பொருண்மிய உட்கட்டுமானங்களுக்கான முதலீடுகளை திசைதிருப்பியிருபபதைக் கண்டிப்பதாகவும் தெரிவித்துள்ளது.

கடற்கோளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென ஐரோப்பிய ஒன்றியத்தாலும், ஏனைய உதவி வழங்கும் நாடுகளாலும் அனுப்பப்பட்ட நிதி - இன, மத பாகுபாடின்றி அனைவரையும் சென்றடைய வேண்டும்.

நிதி உதவிகளைப் பகிர்வதற்கான உடன்படிக்கை தொடர்ந்து அமுல்படுத்தப்படாது இருப்பதையிட்டு கவலை கொள்வதாககவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், மிதிவெடிகளின் பயன்பாட்டை இருதரப்பினரும் நிறுத்துவதோடு, ஒட்டாவா உடன்படிக்கையில் இலங்கை அரசாங்கமும்,ஜெனீவா உடன்படிக்கையின் பற்றுறுதி ஆவணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளும் கையொப்பமிட வேண்டும் என்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றம் தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

## இரவு 7 மணிக்குப்பின்னர் நடமாட கடற்படை தடை!

காரைநகர்—

காரைநகர் பிரதான வீதிகளில் இரவு 7 மணிக்குப் பின்னர் நடமாடுவதை தவிர்க்குமாறு கடற்படையினர் பொதுமக்களிடம் அறிவுறுத்தியுள்ளனர்.

நேற்றுக்காலை காரைநகர் கிராம அலுவலர் பிரிவு மக்களை அழைத்து சந்திப்பு நடத்திய கடற்படை அதிகாரி இவ்வாறு தெரிவித்ததாக தெரியவருகிறது. இந்தச்சந்திப்பில் கலந்துகொண்ட ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்–

பெற்றோர்கள் - பிள்ளைகளை தேவையற்று வீதிகளில் நடமாட விடுவதைத் தவிர்க்குமாறும், இரவு 7 மணிக்குப் பின்னர் வீடுகளை விட்டு வெளியேறுவதைத் தவிர்க்குமாறும் கோரப்பட்டது.

தம்மீது தாக்குதல் நடத்தப்படும்போது பதிலுக்கு தாம் மேற்கொள்ளும் தாக்குதலில் இருந்து மக்களை பாதுகாக்கும் நோக்குடனே தாம் இந்த அறிவுறுத்தலை வழங்குவதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, காரைநகரின் அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களையும் அழைத்து கடற்படையினர் இவ்வாறான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாகத் தெரியவருகிறது. (43)

## பெண் சிப்பாய்களும் சோதனை நடவடிக்கையில்

யாழ்பாணம்—

யாழ்.நகரப் பகுதியில் நேற்று முதல் பெண் இராணுவச்சிப்பாய்கள் மற்றும் பெண் பொலிஸார் வீதிச்சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதை அவதானிக்கமுடிந்தது.

நீண்ட காலத்துக்குப் பின்னர் பெண் இராணுவ சிப்பாய்கள் மற்றும் பெண் பொலிஸார் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதன் காரணமாக பெண்களும் உடற்சோதனையிடப்பட்டதை காணமுடிந்தது. யாழ்.நகர மையப்பகுதிகளின் முக்கிய இடங்கள் மற்றும் புறநகர் பகுதிகளில் பெண் இராணுவச் சிப்பாய்கள் வீதிச் சோதனைப் பணியில் ஈடுபட்டுள்ளனர். (2)

## குடாநாட்டில் நேற்றும் குண்டுத்தாக்குதல்கள்

யாழ்ப்பாணம்—

குடாநாட்டில் படையினரின் நிலைகள்மீது பல்வேறு இடங்களில் நேற்று கைக்குண்டுத்தாக்குதல் மற்றும் துப்பாக்கிப்பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது.

சங்கிலியன்வீதியில் உள்ள காவலரணில் கடமையில் இருந்த படையினர்மீது கைக்குண்டு வீசப்பட்டதோடு, ஆடியபாதம் வீதியில் ரோந்து சென்ற படையினர் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

அத்துடன், கொக்குவில் சம்பியன் லேனில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர்மீது கைக்குண்டு வீசப்பட்டதாக கூறப்படுகிறது.

மேற்படி சம்பவங்களின் போது படைச்சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, முத்திரைச் சந்தியில் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது கைக்குண்டு வீச முற்பட்டதாகத் தெரிவித்து இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன.

## துப்பாக்கிச் சூட்டில் சிப்பாய் காயம்

யாழ்பாணம்—

யாழ்.கஸ்தூரியார் வீதி சந்தியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த படையினரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாக கூறப்படுகிறது.

நேற்றுக் காலை கஸ்தூரியார் வீதியில் கடமையில் ஈடுபட்டிருந்த போதே படைச்சிப்பாயின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் அவரது காலில் காயம் ஏற்பட்டதாகவும் சிகிச்சைக்காக அவர் பலாலி வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிப்பாயின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததால் நகரில் மக்கள் மத்தியில் பெரும் பதற்ற நிலை காணப்பட்டது.

## கிளிநொச்சியில்...

இதேவேளை கடந்த 11 ஆம் திகதி புலிகளின் விமான ஓடுதளம் தாக்கியளிக்கப்பட்டதாக விமானப்படை தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.05.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.